**By E-mail**

Ref. No. 17804/H&D/2/1/2021

Directorate of Medical Education
Kilpauk, Chennai – 10
Dated: 27.03.2023

Sub: Hospitals and Dispensaries –Guidelines and procedures regarding acceptance of Voluntary Body Donation- Communicated- Reg.

Ref: Government letter No.47824/ Z1/2007-4, Health and Family Welfare Department, Dated: 30.06.2008.

**********

Copy of the reference cited is enclosed.

All the Deans of Medical College Hospitals under the administrative control of this Directorate are instructed to strictly adhere to the guidelines issued by the Government while accepting voluntary Body Donation for the purpose of Medical Education or research including anatomical examination and dissection without fail.

Encl: As above

Additional Director of Medical Education

27/3/2023

To

All the Deans of Medical Colleges under the administrative control of this Directorate

**Secretariat,**
**Chennai - 600 009**

**Health and Family Welfare Department**
**Letter No.47824/Z1/2007-4 Dated: 30.6.2008**

From
**Thiru V.K.Subburaj, I.A.S.,**
Secretary to Government,

To
The Director of Medical Education,
Chennai - 600 010. (w.e)

Sir,

**Sub:** Donation of body after death - Procedure for donation - Model format - Approved.

**Ref:** Your letter Ref.No.41162/H&D4/2007 dated 5.10.2007.

------

I am directed to refer to your letter cited and to state that the Government have examined the need for prescribing a procedure for donation of body after death and have decided to approve the model format forwarded by you with certain modifications for following a standard procedure in the matter.

2. An approved copy of the following formats are annexed to this letter.

1. Letter of willingness from voluntary donor.
2. Letter from the Department of Anatomy of Government Medical College to the individual.
3. Forms and documents to be submitted for registration of donation.
4. Guidelines and instructions to the donor and near relatives.

Yours faithfully,

for Secretary to Government

**The model letter of willingness from a voluntary body donor / Letter from the Department of anatomy to the body donor and the Guidelines and procedures to be adopted for voluntary donation.**

Draft letter of willingness

From

To

The Dean,
----------------------------------- Medical College.

Sir/Madam,

Sub: Willingness of voluntary donation of dead body.

---

I, __________________________, residing at ________________________________________________________________ and aged _________ years, am willing to voluntarily donate my body after my death to the students of __________________ Medical College for their study purpose.

I hereby declare that this donation is out of my free will and is under no compulsion. I also, declare that I am in complete sanity of mind and deeds.

I declare that I have no history of Hepatitis / HIV or any other contagious disease.

I have donated / not donated my eyes (after death)

I am willing to know the details of further procedure and abide by the same.

I request you to kindly issue the necessary forms to me so that I can fulfill the necessary formalities.

Thanking you,

Yours faithfully,

(__________________)

Name:
Address in full:
Phone numbers for communication
Residence
Mobile
Any other

**Draft letter from the Department of Anatomy of Government Medical College to the individual.**

From
The Professor,
Department of Anatomy,
____________________ Medical College.

To

Sir,

Sub: Donation of your dead body after death to __________
Medical College.

Ref: Your letter dated_______________ addressed to the Dean,
___________ Medical College.

----------

We appreciate your kind gesture of donating your body to our Institution for study purposes of the students. We have registered your name in our Institution for the same.

In order to proceed with Voluntary Donation, the following procedure has to be followed. Kindly fill in the required forms and send them with the necessary documents so that your name can be registered for Voluntary donation. An identity card bearing a registration number will be issued to you, only after the registration formalities. This card will identify you as a gracious donor and wills thus facilitate donation procedure.

**Forms and documents to be submitted for purposes for Registration voluntary Donation.**

1. A letter written by the donor

{a} that he / she is donating his /her body after death, at his / her own will and is under no compulsion;

{b} that the legal heirs will have no objections to the donation, at the time of registering the donation and subsequently thereof

{c} that the legal heirs or near-relatives of the donor will not raise any objections and thus claim the body after death;

{d} that the body of the donor shall be brought to the nearest Government Medical College and Hospital.

2. The aforesaid letter should be endorsed by two witnesses.

3. A letter from the legal heirs of the donor, clearly specifying that they have no objection to the donation of the body of the donor.

4. A copy of legal heir certificate obtained from the concerned Revenue authority (not below the rank of Tahsildar) indicating all the legal heirs of the said donor.

5. An identification certificate clearly indicating two identification marks of the said donor.

6. Three passport size photographs of the donor.

**Guidelines and Instructions to the donor and near relatives:**

1. The body of the said donor, after death, should be transported without lapse of time (preferably within 8 to 24 hours) to the Government Medical College where the donor has registered his/her donation or to the nearest Government Medical College in the State of Tamil Nadu.
2. The legal heirs or near relatives may be requested to intimate the death of the body of the donor to the Dean / RMO of the nearby teaching medical Institution so that the Institution may arrange for the Transportation of the body to the teach medical institutions.
3. The said body should be accompanied by Death Certificate issued by a competent authority clearly indicating the cause and time of death.
4. The body will be received on all working days from 8.30 am to 3.30 pm at the Department of Anatomy, during non-working hours and holidays, the body can be kept in the Mortuary of the hospital on necessary request to the Resident Medical Officer of the hospital and the same intimated to the department at the earliest opportunity.
5. The death should be natural and / or due to naturally occurring diseases. The body will not be accepted in cases of Medico-legal issues, suicide and poisoning.

தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை**

**கடித எண்.47824 /இசட்.1/2007–6  நாள் 8.8.2008**

அனுப்புநர்
திரு. வி. கு. சுப்புராஜ், ஐ.ஏ.எஸ்.,
அரசு முதன்மைச் செயலாளர்,

பெறுநர்
மருத்துவ கல்வி இயக்குநர்,
சென்னை – 600 010. (இணைப்புடன்)

ஐயா,

**பொருள்:** இறப்புக்குப்பின் உடல் தானம் – தானம் செய்ய வழிமுறைகள் – மாதிரி படிவங்கள் மற்றும் வழிகாட்டி குறிப்புகள் – தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு அனுப்பப்படுகிறது.

**பார்வை :**
1. தங்கள் கடித எண்.41161/ம(ம)ம.4/2007, நாள் 5.10.2007.
2. அரசு கடித எண்.47824/இசட்.1/2007–4 நாள் 30.6.2008.

-----

இறப்புக்குப் பின் உடல் தான செய்ய விரும்புவோர் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் நிர்ணயிக்கப்பட்டு, அதற்கான மாதிரி படிவங்கள் மற்றும் வழிகாட்டி குறிப்புகள் ஒப்பளிக்கப்பட்டு பார்வை இரண்டில் காணும் அரசு கடிதத்தில் தங்களுக்கு அனுப்பப்பட்டது.

2. உடல் தானம் வழங்குவதற்கான வழிமுறைகள் பொதுமக்களை எளிதில் சென்றடைய ஏதுவாக அப்படிவங்கள் மற்றும் வழிகாட்டி குறிப்புகள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு இத்துடன் இணைத்து அனுப்புகிறேன். அதனை அனைத்து மருத்துவக் கல்லூரிகளுக்கும் உடனடியாக அனுப்பி வைக்குமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக

## (1) <u>உடல்தானம் வழங்க முன்வருபவரிடமிருந்து பெறப்படும் விருப்பக் கடிதம்.</u>

அனுப்புநர்

பெறுநர்
முதல்வர்,
____________________மருத்துவக் கல்லூரி,

ஐயா/அம்மையீர்,

பொருள் : இறந்தபின் உடல்தானம் செய்வதற்கு விருப்பம் தெரிவித்தல்.

-----

____________________________________ பகுதியில் வசித்துவருகிற, _________ வயதுடைய நான், என்னுடைய இறப்பிற்குப் பின்னர், என்னுடைய உடலை, மருத்துவக் கல்லூரி மாணவர்களின் கல்வி நோக்கத்திற்காக, ____________________மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு நானே முன்வந்து தானமளிக்க விரும்புகிறேன்.

இந்த உடல் தானமானது, என்னுடைய சொந்த விருப்பத்தின் பேரினால் மட்டுமேயன்றி, இதில் யாதொரு கட்டாயமும் இல்லை என்று நான் இதனால் உறுதியளிக்கிறேன். நான் தெளிந்த மனதுடனும் செயல்பாட்டுடனும் இருக்கிறேன் என்றும் நான் உறுதியளிக்கிறேன்.

எனக்கு ஹெறப்படைடிஸ் / எச்.ஐ.வி அல்லது யாதொரு ஏனைய தொற்று நோய் ஏதுமில்லை என்று நான் உறுதியளிக்கிறேன்.

நான் எனது கண்களை தானமளித்துள்ளேன் / தானமளிக்கவில்லை. (மரணத்திற்குப் பின்)

மேற்கொண்டும் பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள் பற்றிய விவரங்களை அறியவும், அதன்படி உண்மையாக நடக்கவும் நான் விரும்புகிறேன்.

தேவையான நடைமுறைகளை, நான், நிறைவு செய்வதற்கு ஏதுவாக, தேவையான படிவங்களை வழங்குமாறு நான், தங்களிடம் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றியுடன்.

தங்கள் உண்மையுள்ள
(                    )

பெயர்
முழுமுகவரி
வீடு / செல்போன்/ ஏனைய யாதொரு
தகவல் தொடர்புக்காக தொலைபேசி எண்கள்

வி.கே. சுப்புராஜ்,
முதன்மைஅரசு செயலாளர்

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்.

**(2) உடல் தானம் அளிக்க விரும்புபவருக்கு, அரசு மருத்துவக் கல்லூரியின் உடற் கூறு இயல் துறையிடமிருந்து வரப்பெறும் கடிதம்.**

அனுப்புநர்

பேராசிரியர்,
உடற்கூறு இயல் துறை,
__________________________ மருத்துவக் கல்லூரி.

பெறுநர்

ஐயா / அம்மையீர்,

பொருள்: மரணத்திற்குப் பின்னர், __________________________ மருத்துவக் கல்லூரிக்கு உங்களுடைய உடலை தானமாக அளித்தல்.

பார்வை: மருத்துவக் கல்லூரியின் முதல்வருக்கு அனுப்பப்பட்ட _____________ ஆம் நாளிட்ட உங்களுடைய கடிதம்.

-------

மாணவர்களின் கல்வி நோக்கங்களுக்காக, எங்களுடைய நிறுவனத்திற்கு உங்களுடைய உடலை தானமாக அளிக்கின்ற உங்களுடைய மனிதநேயமிக்க செயலை நாங்கள் பாராட்டுகிறோம். இதற்காக, உங்களுடைய பெயரை எங்களுடைய நிறுவனத்தில் பதிவு செய்துள்ளோம்.

உடல்தானம் அளிக்க முன்வருபவர் தொடர்ந்து செயல்படுத்துவதற்கு ஏதுவாக, பின்வரும் நடைமுறை பின்பற்றப்படவேண்டியுள்ளது. தேவைப்படும் படிவங்களை நிரப்பி, அவற்றை தேவையான ஆவணங்களுடன் அனுப்ப வேண்டும். அப்பொழுது தான், உங்களுடைய பெயர், விருப்ப உடல்தானத்திற்காக, பதிவு செய்யப்படும். பதிவு செய்வதற்கான நடைமுறைகளை முடித்தப் பின்னரே, பதிவு எண் கொண்ட அடையாளஅட்டை ஒன்று உங்களுக்கு வழங்கப்படும். இந்த, அடையாள அட்டை, உங்களை இரக்கமுள்ள உடல்தானம் வழங்குபவராக அடையாளப்படுத்துவதுடன், உடல்தானம் வழங்குவதற்கான நடைமுறையையும் எளிதாக்கும்.

தங்கள் உண்மையுள்ள

வி.கே. சுப்புராஜ்,
முதன்மை அரசு செயலாளர்

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்.

**<u>(3) உடல்தானம் அளிக்க முன்வருபவர், அதனை பதிவு செய்வதற்கு அளிக்கப்படவேண்டிய படிவங்களும், ஆவணங்களும்.</u>**

1. (அ) உடல்தானம் வழங்குபவரின் சொந்த விருப்பத்தின் பேரில், யாதொரு கட்டாயமுமின்றி, மரணத்திற்குப் பின்னர், அவருடைய உடலை தானமாக அளிக்கிறார் என்றும்,

   (ஆ) உடல்தானம் அளிப்பதை பதிவு செய்யும் சமயத்திலும், அதன் பின்னரும், உடல்தானம் அளிப்பதில், சட்டப்படிக்கான வாரிசுதாரர்கள், மறுப்புகள் தெரிவிக்கமாட்டார்கள் என்றும்,

   (இ) உடல்தானம் வழங்குபவரின் சட்டப்படிக்கான வாரிசுகள் அல்லது நெருங்கிய உறவினர்கள், மறுப்புகள் எவற்றையும் தெரிவிக்க மாட்டார்கள் என்றும், ஆகவே, மரணத்திற்கு பின்னர் உடலுக்கு உரிமை கோர மாட்டார்கள் என்று உடல்தானம் அளிக்க முன்வருபவரால் எழுதப்பட்ட கடிதம் ஒன்று.

2. மேற்சொன்ன கடிதமானது, இரண்டு சாட்சிகளால் மேலொப்பம் இடப்பட்டிருக்கவேண்டும்.

3. உடல்தானம் வழங்குபவரின் உடலை, தானமாக அளிப்பதற்கு சட்டப்படிக்கான வாரிசுகளுக்கு எந்தவொரு மறுப்பும் இல்லை என்பதை தெளிவாக குறிப்பிடுகின்ற வகையில் உடல்தானம் வழங்குபவரின் சட்டப்படிக்கான வாரிசுகளிடமிருந்து பெறப்பட்ட கடிதம் ஒன்று.

4. மேற்சொன்ன உடல்தானம் வழங்குபவரின் சட்டப்படிக்கான வாரிசுகள் அனைவரையும் குறிப்பிடும் வகையில், சம்மந்தப்பட்ட வருவாய் அதிகாரியிடமிருந்து (வட்டாட்சியரின் பதவித் தரத்திற்கு குறையாத) பெறப்பட்ட சட்டப்படிக்கான வாரிசு சான்றிதழின் நகல் ஒன்று.

5. மேற்சொன்ன உடல்தானம் வழங்குபவரின் இரண்டு அடையாள குறியீடுகளை தெளிவாக குறிப்பிடுகின்ற அடையாள சான்றிதழ் ஒன்று.

6. உடல் தானம் வழங்குபவரின் மூன்று பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள்.

வி.கே. சுப்புராஜ்,
முதன்மை அரசு செயலாளர்

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்.

(4) **உடல் தானம் வழங்குபவர் மற்றும் நெருங்கிய உறவினர்களுக்கான வழிகாட்டிக் குறிப்புகள் மற்றும் அறிவுரைகள்:-**

1. மேற்சொன்ன உடல்தானம் வழங்குபவர், மரணமடைந்துவிட்ட பின்னர், அவருடைய உடலை, காலம் கடத்தாமல் (8 முதல் 24 மணி நேரத்திற்குள்) அவர் உடல் தானம் வழங்குவதற்காக பதிவு செய்துள்ள அரசு மருத்துவக் கல்லூரிக்கு அல்லது தமிழ்நாடு மாநிலத்தில், அருகிலுள்ள அரசு மருத்துவக்கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.
2. உடலை, பயிற்றுவிக்கும் மருத்துவ நிறுவனத்திற்கு கொண்டு செல்வதற்கு நிறுவனம் ஏற்பாடு செய்யும் வகையில், உடல்தானம் வழங்குபவர், மரணமடைந்துவிட்ட தகவலை, அருகிலுள்ள பயிற்றுவிக்கும் மருத்துவ நிறுவனத்தின் முதல்வர் / இருப்பிட மருத்துவ அதிகாரிக்கு தெரிவிக்குமாறு சட்டப்படிக்கான வாரிசுகள் அல்லது நெருங்கிய உறவினர்களிடம் கேட்டுக்கொள்ளப்படலாம்.
3. இறப்பு ஏற்பட்டதற்கான காரணம் மற்றும் இறப்பு ஏற்பட்ட நேரத்தை தெளிவாக குறிப்பிடுகின்ற வகையில் தகுதிவாய்ந்த அதிகாரியால் அளிக்கப்பட்ட இறப்புச் சான்றிதழ், மேற்சொன்ன உடலுடன் சேர்த்து அனுப்பிவைக்கப்படவேண்டும்.
4. உடற்கூறு இயல் துறையால் அனைத்து வேலை நாட்களிலும் காலை 8.00 மணி முதல் மாலை 3.30 மணி வரையில் உடல் பெற்றுக்கொள்ளப்படும். பணி நேரம் அல்லா பிற நேரங்களிலும் விடுமுறை நாட்களிலும், இருப்பிட மருத்துவ அதிகாரியிடம் தேவையான வகையில் கேட்டுகொள்வதன் பேரில், மருத்துவமனையின் பிணவறையில் உடல் வைக்கப்படும். இது குறித்து, உடற்கூறு இயல் துறையிடம் விரைவில் தெரிவிக்கப்படவேண்டும்.
5. மரணம் இயற்கையான முறையில் / அல்லது இயற்கையில் ஏற்படுகிற நோயால் ஏற்பட்டிருக்க வேண்டும்.
6. மருத்துவம் சார் சட்ட பிரச்சினைகள், தற்கொலை. நஞ்சு அருந்தியதால் ஏற்பட்ட மரணம் ஆகிய நேர்வுகளில், உடல் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

வி.கே. சுப்புராஜ்,
முதன்மை அரசு செயலாளர்

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்.